யாகும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இந்த பழத் தோட்டத்தில் 12 மாதங்களும் வருஷம் பூராவும் மாம்பழம் கிடைக்கிறது. இதை அரசு நன்றாக உணர்ந்து இது போன்ற மரங்களை மற்ற மாவட்டங்களிலும் விரிவுபடுத்த ஆராய்ச்சி இருக்கிறது. இதைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றினால் ஏதோ சிறப்பாக நடக்குமென்று எண்ணவில்லை. அரசுத் தாப்பிலேயே எக்ஸ்பெரிமெண்டல் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அரசே இதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பழத் தோட்டம் காலம் முழுவதும் பழம் தருகிற வகையில் இருக்கிறதென்பது அரசுக்குத் தெரியும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆகவேதான் அந்தப் பழந் தோட்டத்தை இன்னும் அதிகமாக விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, ஏற்கெனவே திருவிதாங்கூர் ஸ்டேட்டிலிருந்து 17.4 ஏக்கர் என்று இருந்ததை நாம் விரிவுபடுத்தி மேலும் 14.22 ஏக்கர் எடுத்து அதோடு புதிதாகச் சேர்த்து, ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

காரை கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*550 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ராணிப்பேட்டை, காரை கிராமம், கக்கன் காலனி, அரசாங்கப் புறம்போக்கு நிலத்தில் கடந்த 15 ஆண்டுகளாகக் குடியிருக்கும் ஏழை அரிசன மக்களை தற்சமயம் அப்பகுதிகளில் இருந்து காலி செய்யும்படி அரசு ஆணையிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

(உ) இவர்களுக்கு மாற்று இடத்தில் அரசு வீட்டுவசதி ஏற்பாடு செய்துள்ளதா ?

1975 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ), (இ) & (உ) வடார்க்காடு மாவட்டம், வாலாஜா வட்டத்தைச் சேர்ந்த காரை கிராமத்தில் கக்கன் காலனி என்று சொல்லப்படும் இடத்தில் நில அளவை எண்கள் 639/2 மற்றும் 596 ஆகியவற்றில் உள்ள நிலங்களை சுமார் 19 பேர்கள் ஆக்கிரமித்துக் குடிசைகள் அமைத்துள்ளார்கள். அதில் நில அளவை எண் 639/2-ல் உள்ளவர்களைத் தற்சமயம் காலி செய்யும்படி கேட்கப்படவில்லை. நில அளவை எண் 596 என்பது ஏரிப் புறம்போக்கு ஏரி நிலங்களின்மீதான ஆக்கிரமிப்பினை எதிர்த்து பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் முறையிடுவதாலும், ஆயக்கட்டுதாரர்களின் நலன்கள் பாதிக்கப்படுவதாலும், நில அளவை எண் 596 ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களைக் காலி செய்வதற்காக அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு அருகாமையில் உள்ள நில அளவை எண் 641 இராணுவ முகாம் நிலத்தைத் தருவதாக இராணுவ அதிகாரி, சம்மதம் தெரிவித்துள்ளார். ஆகையால் நில அளவை எண் 596-ல் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு நில அளவை எண் 641-ல் மாற்று இடவசதிகள் அளிக்கப்படும் என்று மாவட்ட வருவாய் அதிகாரி தெரிவித்துள்ளார்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, ராணிப்பேட்டையில் உள்ள இந்தக் காரை கிராமத்தில் உள்ள ஏழை மக்கள் குடிசை போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். அதற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று பதில் சொல்லப் பட்டது. சட்ட மன்ற உறுப்பினராகிய நான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வேறு சட்ட மன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கலாம். அது என்னுடைய தொகுதி. எனக்குத் தெரியும். இந்த ஏழை மக்களுக்கு அந்த இடங்களிலிருந்து அவர்களை வெளியே போகச் சொல்வதற்கு முன் மாற்று இடங்களை உடனடியாக அவர்களுக்குத் தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள்தான் தன் பதிலில் ஏற்பாடு செய்து தரப்படும் என்று சொல்லிவிட்டாரே.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட எந்தவிதமான தகவலும் அங்கேயிருக்கிற குடிசைவாழ் மக்களுக்கு அனுப்பப்படவில்லை. இதை உடனடியாக அமுல்